திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Sangha Liturgical Worship of Muruga

Dr. V. Ganapathyraman

Associate Professor, Department of Tamil Studies, Annamalai University, Annamalai Nagar, India

Manuscript ID :
MT127A0057

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 21.09.2022
Revised: 23.09.2022
Accepted: 25.09.2022
Published: 30.09.2022

Pages : 167-179

DOI:
10.5281/zenodo.7372062

ABSTRACT:

Murugan is known as the Tamil God, the evidence of Muruga worship is a cult that originated in the Tamil community almost from the Tolkappiya period, Murugan is considered as the god belonging to the Kurinji land which is said to be Maivara world among the five types of lands claimed by the Tolkappiyas.

KEYWORDS:

Description of Worship, Origin, Murugan, Earth based Deities, Kurinji Earth Goddess Seyo, Muruga Worship, Inner, Outer based worship

சங்க இலக்கியத்தில் முருக வழிபாடு

முனைவர் வ. கணபதிராமன்,
இணைப்பேராசிரியர்,
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

முருகன் தமிழ்க் கடவுள் என்று அழைக்கப்படுகிறார், முருக வழிபாடு தொடர்பான சான்றுகள் ஏறக்குறைய தொல்காப்பிய காலத்திலிருந்து தமிழ்ச் சமுதாயத்தில் இருந்து வந்த ஓர் வழிபாடு ஆகும், தொல்காப்பியர் கூறிடும் ஐந்து வகை நிலங்களில் மைவரை உலகம் எனக் கூறப்படும் குறிஞ்சி நிலத்திற்கு உரிய கடவுளாக முருகன் கருதப்படுகிறார்.

கருச்சொற்கள்

வழிபாடு விளக்கம், தோற்றம், முருகன், நிலத்தை அடிப்படையான தெய்வங்கள், குறிஞ்சி நிலத்துத் தெய்வம் சேயோன், முருக வழிபாடு, அகம், புறம் சார்ந்த வழிபாடு.

முன்னுரை

தமிழரின் பண்பாட்டு அடையாளமாக திகழ்பவை சங்க இலக்கியங்களாகும். இந்நூற்கள் காலத்தை பிரதிபலித்துக் காட்டுவதோடு மனிதனின் அகம் மற்றும் புற வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழரின் அகம் புறம் கோட்பாடுகளோடு அறம், பண்பாடு, வழிபாடுகள் போன்ற விழுமிய நெறிகளையும் சமூக கூறுகளாகக் கொண்டு சங்ககால மக்கள் வாழ்ந்துள்ளனர். தமிழர்களின் வாழ்வியல் கூறுகளில் வழிபாடுகள் முக்கிய இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. திருமால், சிவன், முருகன், இந்திரன் போன்ற கடவுளர்கள் பண்டையத் தமிழர்களின் வாழ்வியலில் வழிபாட்டிற்குரிய நம்பிக்கைக்குரிய முதன்மைக் கடவுளர்களாகும். அக்கடவுளர்களில் தமிழ்க்கடவுளாம் முருகனை பற்றி அறிவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

வழிபாடு விளக்கம்

வழிபாடு என்னும் சொல்லுக்கு “வழியிற் செல்லுக, பின்பற்றுக. வணக்கம், பசனை, சமயக்கோட்பாடு என்னும் பொருள்களைத் தருகிறது அகராதி”[1] “வழிபாடு என்னும் வேர்ச்சொல்லினின்று பிறந்தது வழிபடு என்னும் சொல் ஆகும். கடவுளினையோ கடவுளர்களையோ, உயிர் உள்ளவற்றையோ, உயிர்

இல்லாதவற்றையோ வழிபாட்டுச் சொற்களைக் கொண்டு வழிபடுவதை வழிபாடு எனலாம்."[2] என்பர் மேற்கூறியவற்றிலிருந்து வழிபாடு என்ற சொல்லுக்குரிய விளக்கத்தை அறியலாம்.

வழிபாட்டின் தோற்றம்

மனிதன் விலங்கு நிலையில் இருந்தபோது, பிற உயிரினங்களைப் போலக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தான். அந்த அனுபவத்தினால் பல கண்டுபிடிப்புகளைச் செய்தான். அவன் தெய்வத்தை ஒரு ஆற்றலாகக் கருதினான். தன்னைப் போன்ற உருவமாகக் கருதவில்லை. இதை, "உயிரினங்களிலே மனிதன் கூடி வாழுகின்ற விலங்கினத்தைச் சேர்ந்தவன். விலங்கு நிலையில் இருந்த போது யானை, மான், எறும்பு போல மனிதன் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த உயிரி ஆகும். மனிதன் தொடக்க கால நாகரிகமான கற்கால நாகரிகத்திலும் மந்தை மந்தையாக அலைந்து திரிந்தான். புதைபொருள் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்படும் கற்கருவிகள் தொகுதி தொகுதியாகவே இன்றும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. (மனிதன் மந்தை உணர்ச்சி உடையவன் (Herd Instict) என்பதால் தான் இன்றும் தனிமை மனிதனுக்கு அச்சத்தையும் வக்கிர உணர்வையும் ஊட்டுகிறது.

மனித சமூகத்தின் வளர்ச்சி அதனுடைய கூட்டுச் சிந்தனையின் விளைவு ஆகும். இரும்புக்காலம், செம்புக்காலம் என்று மனிதன் உலோகங்களைக் கண்டுபிடித்து நாகரிகம் பெற்றதும் சக்கரம், உழு கலப்பை போன்ற அரிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்ததும் கூடிக் கூடித் தொழில் செய்து பெற்ற அனுபவத்தினால் தான், தெய்வங்களும் அப்படிப் பிறந்தவை தான், மிகப் பழங்காலத்தில் சிந்தனை அளவில் இளம் குழந்தைகளாக வாழ்ந்த மனிதர்கள் தெய்வம் என்பதை ஒரு ஆற்றலாகத்தான் கருதினர். கைகால்களுடன் கூடிய ஒரு உருவமாகவோ அல்லது மனிதனைப் போன்ற உருவமாகவோ கருதவில்லை என்பர்."[3]

உணவுப் பொருள்களை மட்டுமே தேடி வாழ்ந்து வந்த பழங்கால மனிதனுக்கு மளம் என்று விழிப்புணர்வு கொண்டதோ, அன்று முதல் இறைநாட்டம் தொடங்கியிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

பண்டைய நாளில் "காடுகளில் கூட்டம் கூட்டமாகத் திரிந்த மனிதன் தரைமீது கிடந்தவற்றைப் பொறுக்கியும், தரையைத் தோண்டியும் உணவைச் சேகரித்தான்; பின்னர் வேட்டையாடினான்; மீன் பிடித்தான்; பின்னர் கால்நடைகளைப் பழக்கினான்; மேய்ச்சல் நிலம் தேடி இடம் பெயர்ந்தான்; அக்காலத்தில் பெண்கள் கண்டுபிடித்த விவசாயத்தைக் கால்நடைகளின் துணை கொண்டு வளர்த்தான். போரில் தான் வென்ற பகைவர்களின் உடல் உழைப்பினைக் கொண்டு பயிர் நிலங்களின் அளவைப்

பெருக்கினான் ஒவ்வொரு கட்டத்திலும் இயற்கை அவலுக்குத் துணை செய்தது. அதனால் ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர் இயற்கையின் சக்திகளைத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டால் தங்களுக்கு நன்மை செய்யும் என நம்பினர் என்பர்."[4]

மனிதன் இயற்கையாகவே அச்சவுணர்வு உடையவன். அவன் தன்னைக்காத்துக்கொள்ள முயற்சிக்கும் ஒவ்வொரு பொழுதிலும், அவனது மனத்தை அச்சமே தெய்வங்களாகக் கருதி வழிபட்டால் தங்களுக்கு நன்மை செய்யும் என நம்பினர் என்பர்.

மனிதன் இயற்கையாகவே அச்சவுணர்வு உடையவன். அவன் தன்னைக் காத்துக்கொள்ள முயற்சிக்கும் ஒவ்வொரு பொழுதிலும், அவனது மனத்தை அச்சமே ஆட்கொண்டுள்ளது. இரவுநேரத்தில் தனக்கெனப் பாதுகாப்பு எதுவும் இல்லாது இருந்த மனிதன் இருளைக் கண்டு அஞ்சி வாழ்ந்தான். இரவுப் பொழுதில் மனக் கலக்கத்தோடு இருந்த மனிதன், ஞாயிறு உதித்து இருள் விலகியதும் தன்னைச் சூழ்ந்துள்ள பொருளைக்கண்டதும், அவனுடைய அச்சம் அகன்றது. இதற்கான காரணத்தை நோக்கினான். கதிரவனைக் கண்டு கைகூப்பி வணங்கித் தன் நன்றியைத் தெரிவித்தான் என்றும் இரவுக் காலங்களில் தண்ணொளி பரப்பிய நிலவைக் கண்டு வணங்கினான் என்றும் அறிஞர்கள் கூறுவர்.

தங்குவதற்குக் குடிசைகளோ, வீடுகளோ இல்லாத கற்கால மனிதன் அவற்றைக் சுட்டிக்கொள்ளும் கலை அறியாதவன். இரவுநேரங்களில் காடுகளிலும், மலைக் குகைகளிலும் தங்கியிருந்த மனிதன் காட்டு மரங்களில் கட்டுக்கடங்காத தீ பரவிப் பற்றி எரிவதைக் கண்ட பின்பு, அதை அணைக்கவியலாது அத்தீயின் ஆற்றலைக் கண்டு வணங்கினான். காட்டு விலங்குகளான கொடிய புலி, சிங்கம் முதலியவற்றைக் கண்டு அஞ்சிய மனிதன் அவற்றையும் தன் வழிபடும் பொருட்களில் இணைத்துக் கொண்டான் என்றும் நாகப்பாம்பும் அவன் கண்ணுக்குத் தப்பவில்லை யாதலால் அதுவும் வழிபாட்டில் இடம்பெற்றது என்றும் அறிஞர்கள் மொழிகின்றனர். இதற்கு, "மிகத் தொடக்க காலத்தில் இயற்கை மனிதனுக்கு ஒரு புதிராகத் தோற்றமளித்தது. இருள், சூரியன், பாம்பு ஆகிய இயற்கைப் பொருள்கள் மனிதனுக்குப் புதிராகவும் இருந்தன; அதே நேரத்தில் அச்சத்தையும் ஊட்டின. ஆயினும் மனிதன் இயற்கையே தனக்கு உணவை அளிக்கிறது என்று அறிந்து கொண்டான். அச்சமும் உணவுத் தேவையும் கொண்ட மனிதன் இயற்கையின் பேராற்றலை வணங்கத் தலைப்பட்டான்"[5] என்ற கருத்து அரணாகிறது.

அத்துடன் மேலும் 'பிராய்டின் மனித மனத்தில் தோன்றிய அச்சம், குற்றவுணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரினாம வளர்ச்சியே வழிபாட்டு நெறிக்கு வித்திட்டது

என்ற கருத்தும், காப்ளின் காடுகளில் வாழ்ந்த கொடிய விலங்குகளும் இயற்கையின் தீயசக்திகளும் மனிதவாழ்வில் எதிர்பாராத பல மரணங்களைத் தோற்றுவித்தன. இந்த எதிர்பாராத மரணங்கள் மனிதவாழ்வில் தோற்றுவித்த பயமும் பயம் விளைவித்த அமைதியின்மையும் நன்னெறிப்பட்ட தெய்வ வழிபாட்டிற்கு அழைத்துச் சென்றன என்னும் கருத்தும் எண்ணுதற்குரியது.

மேற்கூறியவற்றிலிருந்து வழிபாட்டின் தோற்றத்திற்கான காரணங்களை அறியலாம்.

முருகன்

முருகன் என்னும் இறைவன் அழகே உருவானவன் என்று குறப்பிடும் அகநானூறு "இயல் முருகு ஒப்பனை" என்று புகழ்கிறது, மேலும், முருகு வழிபாடு தொடர்பான செய்திகள் பொருணராற்றுப்படை, புறநானூறு போன்ற இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் வெளிக்கொணரப்பட்ட பல்வேறு பொருட்களில் முருகனின் ஆயுதமாகக் கருதப்படும் வேலும் அதில் காணப்படும் சேவலின் உருவமும் சுமேரியப் பகுதியில் கிடைத்த அது போன்ற பொருட்களை ஒத்து இருப்பதாகக் குறிப்பிடும் மார்ட்டிமர்வீலர், கிருஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுக்கு முன்னரே முருகவழிபாடு தமிழ் மண்ணில் இருந்ததை உறுதி செய்துள்ளார்.

பழந்தமிழர்களால் வழிபாட்டு நிலையில் வைத்து வணங்கப்பட்ட தெய்வங்களை அவற்றின் இயல்பு நோக்கி இரண்டு வகையாகப் பாகுபடுத்தி நோக்கலாம்.

அ. நிலத்தை அடிப்படையாகக் கொண்ட தெய்வங்கள்

ஆ. இயற்கையை அடிப்படையாகக் கொண்ட தெய்வங்கள்

நிலத்தை அடிப்படையாகக் கொண்ட தெய்வங்கள்

பழந்தமிழர் மத்தியில் வழிபாட்டு நிலையில் வழக்கில் இருந்த தெய்வங்கள் பற்றித் தமிழின் ஆதி இலக்கண நூலாகிய தொல்காப்பியம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> **"மாயோன்மேய காடுறை உலகமும்**
> **சேயோன் மேயமைவரை உலகமும்**
> **வேந்தன் மேய தீம்புலனல் உலகமும்**
> **வருணன் மேய பெருமணல் உலகமும்**
> **முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்**
> **சொல்லியமுறையாற் சொல்லவும்படுமே"** (தொல்.அகத் - நூத்.05)

பூமியை நான்கு பிரிவாகப் பிரித்து அதனதன் தன்மைகளைத் தொல்காப்பியம் தெரிவிக்கின்றது. காடும் காட்டைச் சார்ந்த நிலமுமாகிய முல்லை நிலத்துத் தெய்வமாக மாயோனும், மலையும் மலைசார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி நிலத்துத் தெய்வமாகச் சேயோனும், வயலும் வயலைச் சார்ந்த நிலமுமாகிய மருதநிலத்துத் தெய்வமாக இந்திரனும், கடலும் கடலைச் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்துத் தெய்வமாக வருணனும், நீரும் நிழலுமற்ற பாலை நிலத்துத் தெய்வமாக காளி, கொற்றவை, அக்கினி முதலானவையும் சுட்டப்படுகின்றன.

இந்தமுறை பிற்காலத்து இலக்கியங்களாலும் அறியப்படுகின்றது. தொல்காப்பியச் சூத்திரத்தில் வரும் 'மேய' என்ற சொல் கவனிக்கத்தக்கது. 'மேய' என்பதற்கு விரும்பிய தங்கிய என்பன பொருள். இதனால் அந்தந்த நிலங்களில் விரும்பி உறைகின்ற தெய்வங்கள் இவை என்பது பெறப்படுகின்றது.

சங்ககால மக்கள் தம்முடைய தொழிலடிப்படையிலேயே தெய்வத்தை உருவாக்கினர். மக்கள் வாழும் இடம், காலம் இவைகளுக்கு ஏற்பவே அவர்களுடைய அகவாழ்க்கையும் புறவாழ்க்கையும் அமைந்திருந்தன. இந்நிலையில் நானில மக்களின் இருப்பிடம், சமுதாய அமைப்பு, தொழில் இவைகளுக்கு ஏற்பவே தெய்வங்களும் அமைந்து இருந்த தன்மையை அறியமுடிகின்றது.

தொல்காப்பியம் குறிப்பிடும் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் முதலான தெய்வங்களில் சேயோன் பற்றி சங்க இலக்கியப் பாடல்களில் அறிந்துகொள்ள முடிகின்றது.

குறிஞ்சி நிலத்துத் தெய்வம் சேயோன்

சேயோன் என்பது முருகக் கடவுள், சிவன் முதலிய தெய்வங்களைக் குறிக்கும் சொல்லாகும்.[6] பழந்தமிழ் இலக்கியங்களில் சேயோன் என்ற சொல் பெரிதும் முருகனையே குறித்து நிற்கின்றன. 'சேயோன் மேயமை வரை உலகு' என்பதனால் முருகன் குறிஞ்சி நிலத்துத் தெய்வமாவது புலப்படுகிறது. சங்க இலக்கியங்களில் முருகன் மலைத் தெய்வமாகவே சிறப்பித்துக் கூறப்படுகின்றான். தமிழரின் முதல் தெய்வம் முருகு என்பர். குறிஞ்சி நில மக்கள் தமக்கு அவ்வப்போது ஏற்படும் துன்பங்களை நீக்க முருகக் கடவுளை வழிபாடு செய்து தமது பரிவாரங்களுடன் குன்றக் குரவைக் கூத்தாடுவர். முருகனைப் பூசிப்பவன் 'வேலன்' எனச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றான். முருகக் கடவுளுக்கு பலி கொடுப்பது இக்கால வழக்கமாயிருந்தது.

வெறியாடல் என்றும் வழிபாட்டு முறையை முருக வழிபாடு சார்ந்ததாகக் கருதலாம். சங்க இலக்கியங்களில் முருகன் உருவமற்றவனாகவும் மரத்திடை

உறைபவனாகவும் கருதி அத்தகைய மரங்களையே வழிபாடு செய்தமைக்கான சான்றுகள் நிறையக் கிடைக்கின்றன. வெறியாடல் சார்ந்த பாடல்களில் இதனைச் சிறப்பாகக் காணலாம்.

சங்க இலக்கியங்களில் முருகனானவன் முருகு, வேள், முருகன், செவ்வேள் என்ற பெயர்களால் குறிக்கப்படுகின்றான். முருகன் வீரம் மிக்கவனாகவும் அச்சுறுத்துபவனாகவும் காணப்பட்டான். இதனைப் பின்வரும் நற்றிணைப் பாடல் சுட்டி நிற்கின்றது.

"முருகுறழ் முன்பொடு கடுஞ் சினம் செருக்கிப்
பொருத யானை வெண்கோடுக்குப்ப........." (நற். 225:1-2)

காதல் நோயால் பீடிக்கப்பட்ட தலைவியின் மேனி மாறுதல்களை இன்னதென்று அறிய மாட்டாத தாய், அதனை தெய்வக் குற்றமோ என்று அஞ்சி முருகனை வழிபட்ட செய்தியை நற்றிணைப்பாடல்கள் தருகின்றன.

"இளமை தீர்ந்தனள் இவளென வளமனை
அருங்கடிப்பதனை ஆயினும் சிறந்து இவள்
பசுந்தனள் என்பது உணராய் பன்னாள்
எவ்வ நெஞ்சமொடு தெய்வம் பேணி...." (நற். 3:51: 1-4)

பிறிதொரு பாடலில் சொல்லும் வேலனை நோக்கித் தோழி பின்வருமாறு கூறுகிறாள்.

"கடவுள் ஆயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே...." (நற். 34:10-11)

'தெய்வமல்ல' என்று சொன்னதனால் தெய்வ அபசாரம் ஏற்படுமோ என்று அஞ்சி 'வாழிய முருகே' என்று குறிப்பிடுகிறாள். முருகக் கடவுளுக்கு பலி கொடுத்தமை பற்றிய செய்திகளை நற்றிணைப் பாடல்களின் பின்வரும் தொடர்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

"வெறியென உணர்ந்த உள்ளமொடு மறியறுத்து அனை
அன்னை அயரும் முருகு நின்" (நற். 47:9-11)

"பன்மலர் சிதறிப் பரவுறு பலிக்கே" (நற். 322:12)

"பலிபெறு கடவுள் பேணிக் கலி சிறந்து..." (நற். 251:8)

முருகன் வேட்டுவர் குலத்தில் வள்ளியை மணந்த செய்தியை நற்றிணைப்பாடலொன்று குறித்து நிற்கிறது.

"முருகு புணர்ந்து இயன்ற வள்ளிபோல" (நற். 82:4)

"தமிழ்நாட்டில் முருகனது முதல் மனைவியான வள்ளியின் பெயரை நற்றிணையே முதலில் சுட்டி நிற்பதாக வானமாமலை குறிப்பிடுகிறார்."[6] வள்ளி திருமணம் குறிஞ்சி நில ஒழுக்கமாகிய களவினைக் காட்டி நிற்கின்றது.

முருக வழிபாடு

சங்க காலத் தமிழகம் இந்து சமயத்திற்கு வழங்கிய கொடை முருக வழிபாடாகும். குறிஞ்சி நிலத்தெய்வமாகிய முருகன் சங்க காலத்தில் முதன்மையானத் தெய்வமாக மிகப்பலரால் வழிபடப்பட்டுள்ளான். முருகக் கடவுள் அன்புத் தெய்வமாகவும், அழகுத் தெய்வமாகவும், காதல் தெய்வமாகவும் போற்றப்பட்ட நிலையை அறியலாம். சூரபதுமனை முருகன் அழித்த செய்தி சங்க இலக்கியங்களில் பல இடங்களில் சுட்டப்பெறுகின்றது. "உயிரின் முனைப்பிற்கும் இறைவனின் அருளிற்கும் நடக்கும் போரே சூரன் முருகன் போர். முருகனது வேல் ஞான சக்தி (அறிவொளி) என்பர் திரு.வி.க."[7] பண்டைத்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் முருக வழிபாட்டு முறையாகிய வெறியாட்டு மிகப் பழமையானது என்பதும் சமுதாயக் கூட்டு வாழ்க்கையின் அடிப்படையில் தோன்றியது என்பதும் அறியப்படுகின்றது. "கடவுட் கோட்பாட்டில் முதலில் தோன்றியது முருக வழிபாடு குறித்த கோட்பாடே. தமிழ் நாட்டில் முருக வழிபாட்டிற்குத் தோற்றமாயிருந்தது வேலன் வெறியாடல். இது ஓர் இனக்குழு வழிபாட்டு முறை என்பர்."[8] "தமிழ் இலக்கியங்கள் முருகனைத் தாய்வழி உரிமை பெறும் திராவிடத் தெய்வமாகக் காட்டுகின்றன."[9]

அகம் சார்ந்த முருக வழிபாடு

முருக வழிபாடு சங்க அக இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகனுக்கு வேலன் எடுக்கும் வெறியாட்டு நிகழ்ச்சிகள், சடங்கு முறைகள் ஆகியவற்றை அகப்பாடல்கள் விரிவாக இயம்புகின்றன. சங்க இலக்கியத் தலைவியின் காதல் நோயை அறியாத தாய் அவள் உடலில் உள்ள வேறுபாட்டிற்குக் காரணம் தீய ஆவிகள் எனக்கருதி அதை விரட்ட வேலன் வெறியாடல் நிகழ்த்துவாள். இது சங்க அகப்பாடல்களில் காணப்படும் இன்றியமையாத மரபாகும்.

சங்க அகப்பாடல் முருகனுக்கு வெறியாட்டுப் பூசை நிகழ்த்தும் வேலன் தலையில் உயரமான தலையணி அணிந்திருந்ததாகவும் நீண்ட பாகை அவனது முதுகில் தொங்கியதையும் கூறுகின்றது. மேலும், வேலன் வெறியாட்டத்தின் போது

ஆட்டை அறுத்து அதன் குருதியைத் தினை மாவோடு கலந்து களத்தில் தூவினான் என்பதை,

“வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்” (**அகம்** 22: 9-1,)

“மறிக்குரல் அறுத்துத் தினைப்பரப்பு இரிஇச்” (**குறுந்**. 263: 1)

என வரும் சங்க இலக்கியப் பாடலடிகள் மூலம் அறியலாம். வேலன் வெறியாடுகின்ற களம் அமையும் இடங்களாகக் காடு, காவு, துருத்தி, மன்றம், பொதி, கடம்ப மரம் முதலியவற்றை,

“வேலன் தைஇய வெறிஅயர்களனும்
காடும், காவும், கவின்பெறு துருத்தியும்
யாரும், குளனும் வேறு பல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்புடம்
மன்றமும்பொதியிலும்” (**திருமுருகு**. 222 -226)

எனத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது. சங்க காலத்தில் வேலன் வெறியாட்டத்திற்கு அமைக்கப்பட்ட களம் கரும்புத் துண்டுகளால் 64 சிறுபகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இதனை “பல்பிரப்பு” எனத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

சங்க காலத்தில் முருகன் கோயில் கொண்டிருந்த இடங்களைப் பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியங்களின் இடம் பெற்றுள்ளன. கடம்பமரத்தடியில் முருகன் வீற்றிருந்ததை,

“- - - - - - -- - - - - புகழ் பூத்த கடம்பமர்ந்து
அருமுனி மரபின் ஆன்றவர் நுகர்ச்சியின்
இரு நிலத்தோறும் இயைகென ஈத்த நின்
தண் பரங்குன்றத்து” (**பரி**. 19:2-5)

என்ற பரிபாடல் அடிகளிலிருந்தும் உணரலாம்.

விரைந்து மணம் நிகழக்கருதிய குன்றக் குரவனின் காதல்மகள் மலைதோறும் எழுந்தருளியுள்ள இறைவனும், குலதெய்வமுமாகிய முருகக் கடவுளை வேங்கை மலர் தூவி தேனாகிய பலியைச் சொரிந்து கண்ணீர்மல்க வேண்டி நின்றான் என்பதை,

"குன்றக் குறவன் காதல் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலைஉறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த ஈர் நறும் கையாள்" **(ஐங். 259: 1-4)**

என ஐங்குறுநூறு கூறுகிறது.

நெடுங்காலம். பெண்மகவு இல்லாமல் துன்புற்ற குன்றக் குறவனும் அவன் மனைவியும் குன்றத்துறையும் முருகக் கடவுளை வழிபாடு செய்து வரமிருந்து அவனருளால் மகளை ஈன்றெடுத்தச் செய்தியை ஐங்குறுநூறு இயம்புகிறது.

புறப்பாடல்களில் முருக வழிபாடு

திருமுருகாற்றுப்படை தரும் முருகன் பற்றிய செய்திகள் சங்க காலத்தில் சிறந்திருந்த முருக வழிபாட்டிற்குச் சான்று கூறி நிற்கின்றன. வீடுபேறு பெற விரும்பும் ஒருவரை முருகன் திருவருளால் வீடுபேறு பெறுதற்குரிய அருளைப் பெற்ற ஒருவன் முருகன் பால் ஆற்றுப்படுத்துவதே திருமுருகாற்றுப்படை ஆகும். முருகனின் அறுபடைவீடுகளாக திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழநி), திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்ச்சோலை ஆகிய தலங்களில் முருகன் வீற்றிருப்பதாகத் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. திருமுருகாற்றுப்படை தமிழில் எழுந்த முருகன் பற்றிய முதல் துதிப்பாடல் எனக் கருத இடமுண்டு.

முருகன் அசுரரை அழித்தமை, கிரவுஞ்ச மலையைப் பிளந்தமை, சேவல் கொடியைப் பெற்றமை, சூரனை வென்றமை, தேவர்கள் சேனைத் தலைவனாகத் திகழ்ந்தமை, தேவர் துயர்தீர்த்தமை, முருகன் பிறப்பு வரலாறு, மயில் ஊர்தியை அடைந்தமை முதலிய பல செய்திகளைச் சங்க நூல்கள் பதிவு செய்துள்ளன. முருகன் கடல் நடுவே சென்று சூரனை வெற்றி கொண்ட திறத்தை

"நளி இரும்பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேர்இசை
கடுஞ்சின விறல் வேள்" **(ஐங். 259: 1-4)**

எனப் பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. இதனை நோக்கும் போது முருகன் காதல் தெய்வமாக மட்டுமல்லாமல் போர்த்தெய்வமாகவும் வீரத்தின் விளைநிலமாகவும் காணப்படுகிறார்.

மகளிர் பிரிந்து சென்ற தம் கணவர் வந்து சேர்ந்த பின்னர் தம்மைப் பிரியாதிருக்கும் படி செவ்வேளை வேண்டி யாழிசை எழுப்பிப் பாடுவர். அவ்வாறு பாடும் பாட்டினை முருகப் பெருமானும் விரும்புவான் என்பதை,

> **"கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை**
> **எழிஇப் பாடும் பாட்டு அமர்ந்தோயே"** (பரி. 14:23-24)

எனப் பரிபாடல் சுட்டும்.

திருமுருகாற்றுப்படை இறைப்பெயர் கொண்டு முருகனின் புகழ்பாடுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. "திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகவேளைப் பற்றியும் முருகனுக்கு கோயில் இருந்தது குறித்தும் அக்கோவில் புனிதமாகப் போற்றப்பட்டது குறித்தும் புறநானூறு தெரிவிக்கின்றது."[10]

பேரெழில் பொருந்திய மகளிர் மாடங்களில் நின்று முன்கை கூப்பி முருகப்பெருமானை வழிபட்டனர். மகளிர் பாடும் பாட்டிற்கு இயைய, வங்கியம் இசை உண்டாக்க, யாழ் முரல, முழவு முழங்க, முரசு ஒலிப்ப, வெறியாடுவதற்குரிய முருகனுக்கும், பலரும் தொழும் தெய்வங்களுக்கும் விழா எடுத்துச் சிறப்பித்தனர். மகளிர் விழாக் காலத்தில் இல்லுறை தெய்வம் மகிழ மனைவாயிலில் மலரணிந்த கொடிகளைக் கட்டினர். இவ்வாறு மகளிர் முருகக் கடவுளை வழிபட்டச் செய்தியைப் பட்டினப்பாலை புலப்படுத்துகிறது.[11]

மகளிர் தெய்வத்தின் அருளால் துன்பமின்றி ஈன்றனிமை நீங்கிப் பாலால் இடங்கொண்டு ஏந்திய நகில்களில் சுரக்கும்படி குளத்து நீரில் குளிப்பர். இவ்வாறே முதற் சூலுற்ற மகளிரும் துன்பமின்றி புதல்வரைப் பயத்தல் வேண்டும் என்று தெய்வத்தைப் பரவுவர். அவ்வாறு பரவிக் குறை தீர்ந்தபின் தம் சுற்றத்தாருடனும், வளமான மகளிருடனும் பூசைக்கு வேண்டும் பொருட்களுடன் இசைக் கருவிகள் ஒலிக்க மெல்ல நடந்துசென்று கையால் தொழுது தேவராட்டியோடு பலிக்கடனைச் செலுத்துவர். வேலன் குறிஞ்சி மலரைச் சூடி கடம்பின் கீழுள்ள முருகனைத் தன் மெய்யின் கண் நிறுத்தி வழிபடுவதால் தம்முள் தழுவி கை கோர்த்து குன்றுகள் தோறும் குரவையாடுவர். இவ்வாறு மதுரைக்காஞ்சி முருக வழிபாட்டைக் குறிப்பிடுகிறது."[12]

அன்பர்கள் யாம் நின்னிடம் இரப்பவை நுகரப்படும் பொருளும் அவற்றைத் தரும் பொன்னும், அவற்றில் அனுபவிக்கும் இன்பமும் அல்ல. எமக்கு வீடுபேறு அளிக்கும் நின் திருவருளும் அந்த அருளை உண்டாக்கவல்ல நின்னிடத்தே யாம் செலுத்தும் அன்பும், அவ்விரண்டான் வரும் அறமும் ஆகிய மூன்றுமே ஆகும். எனவே இவற்றை நீ எமக்கு அளித்தருள வேண்டும் என்பதை,

"- - - - - - - - - யாம் அம் இரப்பை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே" (பரி. 5: 78-81)

எனப் பரிபாடல் குறிப்பிடக் காண்கிறோம்.

முடிவுரை

முருகன் தமிழ்க் கடவுள் என்று அழைக்கப்படுகிறார், முருக வழிபாடு தொடர்பான சான்றுகள் ஏறக்குறைய தொல்காப்பிய காலத்திலிருந்து தமிழ்ச் சமுதாயத்தில் இருந்து வந்த ஓர் வழிபாடு ஆகும், தொல்காப்பியர் கூறிடும் ஐந்து வகை நிலங்களில் மைவரை உலகம் எனக் கூறப்படும் குறிஞ்சி நிலத்திற்கு உரிய கடவுளாக முருகன் கருதப்படுகிறார். சங்கப் பனுவல்களில் தமிழ்க் கடவுளான முருகனைப் பற்றி பல நிலைகளில் பேசுவதைக் காணமுடிகிறது.

தொகுப்புரை

- மனிதன் விலங்கு நிலையில் இருந்தபோது, பிற உயிரினங்களைப் போலக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தான். அந்த அனுபவத்தினால் பல கண்டுபிடிப்புகளைச் செய்தான். அவன் தெய்வத்தை ஒரு ஆற்றலாகக் கருதினான். தன்னைப் போன்ற உருவமாகக் கருதவில்லை.
- உயிரினங்களிலே மனிதன் கூடி வாழுகின்ற விலங்கினத்தைச் சேர்ந்தவன்.
- மனிதன் இயற்கையாகவே அச்சவுணர்வு உடையவன். அவன் தன்னைக்காத்துக்கொள்ள முயற்சிக்கும் ஒவ்வொரு பொழுதிலும், அவனது மனத்தை அச்சமே தெய்வங்களாகக் கருதி வழிபட்டால் தங்களுக்கு நன்மை செய்யும் என நம்பினர் என்பர்.
- முருகன் என்னும் இறைவன் அழகே உருவானவன் என்று குறப்பிடும் அகநானூறு "இயல் முருகு ஒப்பனை" என்று புகழ்கிறது,
- தொல்காப்பியம் குறிப்பிடும் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் முதலான தெய்வங்களில் சேயோன் பற்றி சங்க இலக்கியப் பாடல்களில் அறிந்துகொள்ள முடிகின்றது.
- சங்க இலக்கியங்களில் முருகனானவன் முருகு, வேள், முருகன், செவ்வேள் என்ற பெயர்களால் குறிக்கப்படுகின்றான்.
- முருகன் வீரம் மிக்கவனாகவும் அச்சுறுத்துபவனாகவும் காணப்பட்டான்.

- சங்க காலத் தமிழகம் இந்து சமயத்திற்கு வழங்கிய கொடை முருக வழிபாடாகும். குறிஞ்சி நிலத்தெய்வமாகிய முருகன் சங்க காலத்தில் முதன்மையானத் தெய்வமாக மிகப்பலரால் வழிபடப்பட்டுள்ளான்.
- முருகக் கடவுள் அன்புத் தெய்வமாகவும், அழகுத் தெய்வமாகவும், காதல் தெய்வமாகவும் போற்றப்பட்ட நிலையை அறியலாம்.

சான்றெண் விளக்கம்

1. TAMIL LEXICON Vol, VI P.3645.
2. இரா.சீனிவாசன், சக்தி வழிபாடு, ப.2.
3. தொ.பரமசிவன், தெய்வங்களும் சமூக மரபுகளும், ப.2.
4. மேலது, ப.5.
5. மேலது, ப.1.
6. வானமாமலை, நா., 1920, முருகவழிபாடு இருபண்பாடுகளின் இணைப்பே ஆராய்ச்சி, மலர் 1. இதழ் 4.
7. திரு.வி.க. முருகன் அல்லது அழகு, ப.67.
8. நாகப்ப நாச்சியப்பன், திருக்கோவில் வழிபாடு, ப.2,
9. மேலது. ப.77.
10. புறம் 55: 18-19.
11. பட்டினப். 145-16.
12. மது. 6,1-615.

துணைநூற்பட்டியல்

1. இரா.சீனிவாசன், சக்தி வழிபாடு, ஜெயக்குமாரி பதிப்பக வெளியீடு, நாகர்கோயில், 1975.
2. தொ.பரமசிவன், தெய்வங்களும் சமூக மரபுகளும்.காலச்சுவடு பதிப்பகம் வெளியீடு, 2002.
3. வானமாமலை, நா., 1920, முருகவழிபாடு இருபண்பாடுகளின் இணைப்பே ஆராய்ச்சி, மலர் 1. இதழ் 4.
4. திரு.வி.க. முருகன் அல்லது அழகு. ஜீவன் பிரஸ், சென்னை, 1982.
5. நாகப்ப நாச்சியப்பன், திருக்கோவில் வழிபாடு. மணிவாசகர் பதிப்பகம், சென்னை.1991.
6. வேலுப்பிள்ளை.ஆ, தமிழர் சமய வரலாறு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1980.
7. சங்க இலக்கியம் மூலமும் உரையும், கோவிலூர் மடாலாயப் பதிப்பகம், கோவிலூர், 2003.

REFERENCES

1. Ira Srinivasan, Shakti Lipadu, Jayakumari Publishing House, Nagercoil, 1975.
2. T. Paramasivan, Deities and Social Traditions. Kalachuvadu, Publishing House, 2002.
3. Vanamamalai, N.A., 1920, Research on the Connection of Two Cultures of Muruga Worship, Flower 1. Issue
4. Mr. V.K. Murugan or beauty. Jeevan Press, Chennai, 1982.
5. Nagappa Nachiyappan, temple worship. Manivaskar Publishing, House, Chennai.1991.
6. Velupillai. A, History of Tamil Religion, Bari Book Farm, Chennai, 1980.
7. Sangha Literary Source and Text, Kovilur Monastery Publication, Kovilur, 2003.